

“வெளிப்படையான விலை நிர்ணயம், நல்ல வர்த்தக நடைமுறைகள் ஆகியவற்றைக் கடைபிடித்து நம்பத்தகுந்த விநியோகிப்பாளர் எனும் நற்பெயரை வளர்த்துக்கொள்ளுங்கள்.”

**பயனீட்டாளர் பாதுகாப்பு (நியாயமான வர்த்தகம்) சட்டம் (CPFTA)**

நிர்வகிப்பது CCCS COMPETITION & CONSUMER COMMISSION SINGAPORE

## விலைகளின் வெளிப்படைத்தன்மை குறித்த CCCS வழிகாட்டிகள்

CPFTA சட்டத்தை மீறக்கூடிய விலை நிர்ணய நடைமுறைகள் பற்றி விநியோகிப்பாளர்களுக்கு கூடுதல் தெளிவைத் தருகின்றன. இந்த வழிகாட்டிகள் இணைய வர்த்தகர்களுக்கும் கடை வியாபாரிகளுக்கும் பொருந்தும். இவை நான்கு முக்கிய அம்சங்களில் நல்ல வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிக்கின்றன:

(அ) படிப்படியாக வெளிப்படும் விலை
(ஆ) விலை ஒப்பீடு
(இ) விலைக்கழிவு
(ஈ) ‘இலவசம்’ என்ற சொல்லின் பயன்பாடு

## a) படிப்படியாக வெளிப்படும் விலை

இறுதிவிலை அதிகமாக இருந்தபோதும் கட்டாயக் கட்டணங்களையும் முன்கூட்டியே குறியிடப்பட்ட விருப்பத் தெரிவுகளின் விலைகளையும் சேர்க்காமல், வேறொரு அறிவிப்பு விலையைக் காட்டுதல்

### ✔ செய்யவேண்டியவை

1. அறிவிப்பு விலையில் கட்டாயக் கட்டணங்களைச் சேர்க்கவும். கட்டாயக் கட்டணங்களை முன்கூட்டியே கணக்கிட முடியாவிட்டால், அறிவிப்புவிலையுடன் சேர்த்து அத்தகைய கட்டணங்களும் உள்ளதைத் தெரிவிக்கவும்.

2. பயனீட்டாளர்கள் விரும்பும் தெரிவுகளை அவர்கள் தேர்ந்தெடுக்கும்படி செய்யவும் (எ.கா. கூடுதலாக வாங்கப்படும் பொருட்களுக்கு, விருப்பத் தெரிவு முறையைக் கடைபிடிக்கவும்)


3. விருப்பத் தெரிவு முறைக்குப் பதில் முன்கூட்டியே தேர்வுக்குறியிடப்பட்ட பெட்டிகளைப் பயன்படுத்தினால்,
   - பெட்டிகளை பெரிதாக்கவும்
   - முன்கூட்டியே தேர்வுக்குறியிடப்பட்ட பொருட்களின் விலையைத் தெரிவித்து அவற்றின் விலையை அறிவிப்பு விலையுடன் சேர்க்கவும்
   - விதிகள் மற்றும் நிபந்தனைகளை வெளிப்படையாகத் தெரிவிக்கவும்

4. விதிகளையும் நிபந்தனைகளையும் வெளிப்படையாகத் தெரிவிக்க இடம் போதாவிட்டால், அவற்றுக்கான மீத்தொடுப்பு தெளிவாகத் தெரியும்படி செய்யவும்

5. எல்லா கட்டாயக் கட்டணங்களும் தெரிவுக் கட்டணங்களும் தனித்தனியாகக் குறிக்கப்படும் விலைப்பட்டியலைப் பயனீட்டாளர்கள் பணம் செலுத்துவதற்கு முன்னதாக வழங்கவும்

### சட்டமீறல் ஆகக்கூடியவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்

- இறுதிவிலை அதிகமாகும் வகையில், அறிவிப்பு விலையில் கட்டாயக் கட்டணங்களையோ முன்கூட்டியே தேர்வுக்குறியிடப்பட்ட பொருட்களின் விலைகளையோ நீக்குதல்
- முக்கிய விதிகளையும் நிபந்தனைகளையும் நீக்குதல், அவற்றை கண்டுபிடிக்கச் சிரமமாக்குதல் அல்லது மிகச்சிறிய எழுத்துகளில் அவற்றைக் குறிப்பிடுதல்




>> கூடுதல் தகவல்கலுக்கு அடுத்த பக்கத்தைப் பார்க்வும்

## b) விலை ஒப்பீடு

விலையின் போட்டித்தன்மை அல்லது விலையில் உள்ள அனுகூலத்தைக் காட்டுவதற்காக போட்டியாளர்களின் விலைகளுடன் ஒப்பிடுதல்

### ✔ செய்யவேண்டியவை

1. விலை ஒப்பிடப்படும் பொருட்களோ சேவைகளோ, பயனீட்டாளர்களால் அல்லது வர்த்தக தரநெறிகளால், நிகரானவை என்றோ சமமானவை என்றோ ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்யவும்
2. விலை ஒப்பீடுகள் பொய்யானவை அல்லது தவறாக நம்ப வைப்பவை இல்லை என்பதற்குச் சான்றாக, போட்டி விலையைச் சுட்டவும்
3. போட்டியாளர்களின் விலைகளை அவ்வப்போது சரிபார்த்து, தேவைப்பட்டால் விலை ஒப்பீடுகளை மாற்றவும்

### சட்டமீறல் ஆகக்கூடியவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்

- போட்டியாளரின் விலை கூடுதலாக இல்லாதபோதும், அவரது விலை கூடுதல் என்று தெரிவித்தல்
- தற்போது நடப்பில் இல்லாத அல்லது ஏற்க முடியாத விலை ஒப்பீடுகளைச் செய்தல்
- தம் பழையவகைப் பொருளின் விலையை, கூடுதல் அம்சங்கள் உள்ள போட்டியாளரின் புதிய வகைப் பொருட்களுடன் ஒப்பிடுதல்




## c) விலைக்கழிவு

விற்பனையாளர் தம் பொருள் / சேவைக்காக விலைக்கழிவை அளித்தல்

### ✔ செய்யவேண்டியவை

1. விலைகளை ஒப்பிடுகையில் உண்மையான முந்தைய விலைகளைப் பயன்படுத்தவும்
2. முந்தைய விற்பனைகள், விலைகள் ஆகியவற்றின் சான்றுகளைப் பதிவு செய்யவும்
3. விலைக்கழிவுக் காலம், பொய்யானதாக அல்லது தவறாக நம்பவைப்பதாய் இருக்கக்கூடாது. விலைக்கழிவுக் காலத்தைத் தெளிவாகவும் பெரிதாகவும் குறிப்பிடவும்.


✔ தள்ளுபடி விலை

**$50**

(முந்தைய விலை : $80)

விற்பனை காலம்

1 Jan 2020 - 31 Jan 2020



### சட்டமீறல் ஆகக்கூடியவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்

- ஒருபோதும் இல்லாத விலையை அல்லது சொற்பக் காலத்துக்கு மட்டுமே இருந்த விலையைக் காட்டி, ஒரு பொருளை விலைக்கழிவு பெற்றது என விளம்பரம் செய்தல்
- தலா 3 வெள்ளிக்கு விற்கப்படும் இரண்டு பொருட்களை ஒன்றாக சேர்த்து "ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம்" என விளம்பரம் செய்து 6 வெள்ளிக்கு விற்பது
- விலைக்கழிவு அதிக காலத்துக்கு இருப்பினும், நல்ல விலை என்றும் பொருள் எளிதாகக் கிடைக்காது என்றும் பயனீட்டாளர்களைத் தவறாக நம்ப வைக்க "குறைந்த காலத்துக்கு மட்டும்" என விளம்பரம் செய்தல்
- ஒரு பொருள் அல்லது சேவைக்கு விலைக்கழிவு இல்லாதபோது, விலைக்கழிவை விளம்பரம் செய்தல்

## d) 'இலவசம்' என்ற சொல்லின் பயன்பாடு

பொருளைப் பயன்படுத்தச் செய்து வாங்கவைக்கும் நோக்கத்துடன் விற்பனையாளர்கள் பயனீட்டாளர்களுக்கு இலவசப் பொருட்கள் / சேவைகளை வழங்குதல்

### ✔ செய்யவேண்டியவை

1. சில்லறைச் செலவுகள் (எ.கா. அனுப்புகட்டணம்), விலை வரையறைகள், அடுத்தக்கட்ட கட்டணங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை, "இலவசம்" என்ற குறிப்புடன் சேர்த்து தெளிவாகவும் பெரிதாகவும் குறிப்பிடவும்
2. இலவசப் பயன்பாட்டுக் காலம் முடியப் போவதைப் பயனீட்டாளர்களுக்குத் தெரிவித்து, விற்பனை ரத்தைப் பற்றிய தெளிவான தகவல்களை வழங்கவும்

### சட்டமீறல் ஆகக்கூடியவற்றுக்கான எடுத்துக்காட்டுகள்

- இலவசம் என்று குறிப்பிடப்பட்ட பொருள் / சேவைக்காக பயனீட்டாளர்களைப் பணம் செலுத்த வைத்தல்
- ஏற்கனவே தொகுப்பு விலைக்கணக்கில் சேர்க்கப்பட்ட பொருள் அல்லது சேவையை இலவசம் என்று குறிப்பிடுதல்
- ஒரு பொருள் அல்லது சேவையை அளிக்கும் எந்த எண்ணமும் விற்பனையாளருக்கு இல்லாதபோது அதனை இலவசம் என்று குறிப்பிடுதல்

